பெரியார் பல்கலைக்கழகம்,சேலம்-11.

பெரியார் தொலைநிலைக் கல்வி நிறுவனம்

# (PRIDE)

பருவமுறைப் பாடத்திட்டம்

# அடிப்படைத் தமிழ்

2020-ஆம் ஆண்டு முதல்

பாடத்திட்ட அமைப்பு:

| பருவம் | தாள் பெயர் | அகமதிப் பெண்கள் | தேர்வு மதிப் பெண்கள் | மொத்த மதிப் பெண்கள் | தேர்ச்சி மதிப் பெண்கள் அ.ம.10+தே.ம. 30 = 40 | மதிப் பீடு |
|---|---|---|---|---|---|---|
| I | தாள் 1 இக்கால இலக்கியங்களும் உரைநடையும் | 25 | 75 | 100 | 40 | 4 |
| II | தாள் 2 இடைக்கால இலக்கியங்களும் சிறுகதையும் | 25 | 75 | 100 | 40 | 4 |
| III | தாள் - 3 காப்பியங்களும் புதினமும் | 25 | 75 | 100 | 40 | 4 |
| IV | தாள் - 4 பண்டைய இலக்கியங்களும் நாடகமும் | 25 | 75 | 100 | 40 | 4 |

வினாத்தாள் அமைப்புமுறை

**முதல் பருவம் - தாள்-1**

**இக்கால இலக்கியங்களும் உரைநடையும்**

| வினாத்தாள் பகுதி | பாடத்திட்ட அலகு எண் | வினாத்தாளில் வினா எண் | வினா எண்ணிக்கை | விருப்பத் தெரிவு (Choice) | விடையமைப்பு | மதிப்பெண்கள் |
|---|---|---|---|---|---|---|
| அ (2 மதிப்பெண் வினாக்கள்) | 1 | 1,2 | 2 | இல்லை | இடம்சுட்டிப் பொருள் விளக்கம் | 10×2=20 |
| | 2 | 3,4 | 2 | இல்லை | இடம்சுட்டிப் பொருள் விளக்கம் | |
| | 3 | 5,6 | 2 | இல்லை | குறுவிடை | |
| | 4 | 7,8 | 2 | இல்லை | குறுவிடை | |
| | 5(அ) | 9,10 | 2 | இல்லை | குறுவிடை | |
| ஆ (5 மதிப்பெண் வினாக்கள் ) | 1 | 11 | 1 | இது (அல்லது) அது | சிறுவிடை | 5×5=25 |
| | 2 | 12 | 1 | ,, | .. | |
| | 3 | 13 | 1 | ,, | ,, | |
| | 4 | 14 | 1 | ,, | ,, | |
| | 5(ஆ) | 15 | 1 | ,, | ,, | |
| இ (10 மதிப்பெண் வினாக்கள்) | 1 | 16 | 1 | உண்டு | பெருவிடை | 3×10=30 |
| | 2 | 17 | 1 | ,, | ,, | |
| | 3 | 18 | 1 | ,, | ,, | |
| | 4 | 19 | 1 | ,, | ,, | |
| | 5(இ) | 20(அ) | 1 | ,, | ,, | |
| | (ஈ) | (ஆ) | 1 | ,, | ,, | |
| | (உ) | (இ) | 1 | ,, | ,, | |

### இரண்டாம் பருவம் : தாள்-2

### இடைக்கால இலக்கியங்களும் சிறுகதையும்

| வினாத்தாள் பகுதி | பாடத்திட்ட அலகு எண் | வினாத்தாளில் வினா எண் | வினா எண்ணிக்கை | விருப்பத் தெரிவு (Choice) | விடையமைப்பு | மதிப்பெண்கள் |
|---|---|---|---|---|---|---|
| அ (2 மதிப்பெண் வினாக்கள்) | 1 | 1,2 | 2 | இல்லை | இடம்சுட்டிப் பொருள் விளக்கம் | 10×2=20 |
| | 2 | 3,4 | 2 | இல்லை | இடம்சுட்டிப் பொருள் விளக்கம் | |
| | 3 | 5,6 | 2 | இல்லை | குறுவிடை | |
| | 4 | 7,8 | 2 | இல்லை | குறுவிடை | |
| | 5(அ) | 9,10 | 2 | இல்லை | குறுவிடை | |
| ஆ (5 மதிப்பெண் வினாக்கள் ) | 1 | 11 | 1 | இது (அல்லது) அது | சிறுவிடை | 5×5=25 |
| | 2 | 12 | 1 | ,, | .. | |
| | 3 | 13 | 1 | ,, | ,, | |
| | 4 | 14 | 1 | ,, | ,, | |
| | 5(ஆ) | 15 | 1 | ,, | ,, | |
| இ (10 மதிப்பெண் வினாக்கள்) | 1 | 16 | 1 | உண்டு | பெருவிடை | 3×10=30 |
| | 2 | 17 | 1 | ,, | ,, | |
| | 3 | 18 | 1 | ,, | ,, | |
| | 4 | 19 | 1 | ,, | ,, | |
| | 5(இ) | 20(அ) | 1 | ,, | ,, | |

## மூன்றாம் பருவம் : தாள்-3

## காப்பியங்களும் புதினமும்

| வினாத்தாள் பகுதி | பாடத்திட்ட அலகு எண் | வினாத்தாளில் வினா எண் | வினா எண்ணிக்கை | விருப்பத் தெரிவு (Choice) | விடையமைப்பு | மதிப்பெண்கள் |
|---|---|---|---|---|---|---|
| அ (2 மதிப்பெண் வினாக்கள்) | 1 | 1,2 | 2 | இல்லை | இடம்சுட்டிப் பொருள் விளக்கம் | 10×2=20 |
| | 2 | 3,4 | 2 | இல்லை | இடம்சுட்டிப் பொருள் விளக்கம் | |
| | 3 | 5,6 | 2 | இல்லை | குறுவிடை | |
| | 4 | 7,8 | 2 | இல்லை | குறுவிடை | |
| | 5(அ) | 9,10 | 2 | இல்லை | குறுவிடை | |
| ஆ (5 மதிப்பெண் வினாக்கள் ) | 1 | 11 | 1 | இது (அல்லது) அது | சிறுவிடை | 5×5=25 |
| | 2 | 12 | 1 | ,, | .. | |
| | 3 | 13 | 1 | ,, | ,, | |
| | 4 | 14 | 1 | ,, | ,, | |
| | 5(ஆ) | 15 | 1 | ,, | ,, | |
| இ (10 மதிப்பெண் வினாக்கள்) | 1 | 16 | 1 | உண்டு | பெருவிடை | 3×10=30 |
| | 2 | 17 | 1 | ,, | ,, | |
| | 3 | 18 | 1 | ,, | ,, | |
| | 4 | 19 | 1 | ,, | ,, | |
| | 5(இ) | 20(அ) | 1 | ,, | ,, | |

## நான்காம் பருவம் : தாள்-4

## பண்டைய இலக்கியங்களும் நாடகமும்

| வினாத்தாள் பகுதி | பாடத்திட்ட அலகு எண் | வினாத்தாளில் வினா எண் | வினா எண்ணிக்கை | விருப்புத் தெரிவு (Choice) | விடையமைப்பு | மதிப்பெண்கள் |
|---|---|---|---|---|---|---|
| அ (2 மதிப்பெண் வினாக்கள்) | 1 | 1,2 | 2 | இல்லை | இடம்சுட்டிப் பொருள் விளக்கம் | 10×2=20 |
| | 2 | 3,4 | 2 | இல்லை | இடம்சுட்டிப் பொருள் விளக்கம் | |
| | 3 | 5,6 | 2 | இல்லை | குறுவிடை | |
| | 4 | 7,8 | 2 | இல்லை | குறுவிடை | |
| | 5(அ) | 9,10 | 2 | இல்லை | குறுவிடை | |
| ஆ(5 மதிப்பெண் வினாக்கள்) | 1 | 11 | 1 | இது (அல்லது) அது | சிறுவிடை | 5×5=25 |
| | 2 | 12 | 1 | ,, | .. | |
| | 3,4 | 13,14 | 2 | ,, | ,, | |
| | 5(ஆ) | 15 | 1 | ,, | ,, | |
| இ (10 மதிப்பெண் வினாக்கள்) | 1 | 16 | 1 | உண்டு | பெருவிடை | 3×10=30 |
| | 2 | 17 | 1 | ,, | ,, | |
| | 3 | 18 | 1 | ,, | ,, | |
| | 4 | 19 | 1 | ,, | ,, | |
| | 5(இ) | 20(அ) | 1 | ,, | ,, | |

**வினாத்தாள் அமைப்பு முறை**

மூன்று மணிநேரம் கால அளவு கொண்ட ஒவ்வொரு பாடத்திற்கும் வினாத்தாள் அமைப்பானது பகுதி-அ, பகுதி-ஆ, பகுதி-இ ஆகியவற்றைக் கொண்டு மதிப்பெண்கள் பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்படும்.

| பகுதி | **வினாக்கள் அமைப்பு** | **மதிப்பெண்** | **மொத்தம்** |
|---|---|---|---|
| பகுதி-அ, | ஒரு சொல் (அ) ஓரிரு தொடர்களில் விடையளித்தல் | 10x2 | 20 |
| பகுதி-ஆ, | ஒன்றரை பக்க அளவில் விடையளித்தல் (இது அல்லது அது என்ற முறை) | 5 x5 | 25 |
| பகுதி-இ | கட்டுரை வடிவில் விடையளித்தல் (ஐந்தனில் எவையேனும் மூன்றனுக்கு விடைஎழுதுதல்) | 3x10 | 30 |
| மொத்த மதிப்பெண்கள் | | | 75 |

**வினாத்தாள் அமைப்பு**

**பொதுக்குறிப்பு:**

ஒவ்வொரு தாளிலும் முதல் இரண்டு அலகுகளிலிருந்து மட்டும் இடம் சுட்டிப் பொருள் விளக்கும் வினாக்கள் அமையும்.

நான்கு தாள்களிலுமே பாடத்திட்டத்தின் செய்யுள் பகுதிகளுக்கு ஏற்ப இலக்கிய வரலாறும் மொழித்திறனும் அலகுகளாக அமைக்கப்பட்டுள்ளன.

**காலம் 3 மணிகள்** **மொத்த மதிப்பெண்: 75**

**பகுதி– அ** (10×2=20)

அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். ஒவ்வோர் அலகிலும் இரு வினாக்கள் வீதம் பத்து ஒரு சொல் (அ) ஓரிரு தொடர்களில் விடையளிக்க வினா அமைய வேண்டும்.

**பகுதி– ஆ** (5×5=25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். ஒவ்வோர் அலகிலும் ஒன்றரை பக்க அளவில் விடையளிக்கத்தக்கதான வினா கட்டாயம் கேட்டல் வேண்டும். (இது அல்லது அது என்ற முறை)

**பகுதி– இ** (3×10=30)

ஒவ்வோர் அலகிலும் கட்டுரை வடிவில் விடையளிக்க கேள்விகள் கட்டாயமாக கேட்டல் வேண்டும். ஐந்தனில் எவையேனும் மூன்றுவினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வினா அமைய வேண்டும்.

**குறிப்பு**

1. பகுதி ‘அ’ வில் 1 முதல் 10 வரையும்
   பகுதி‘ஆ’ வில் 11 முதல் 15 வரையும்
   பகுதி‘இ’ யில் 16 முதல் 20 வரையும் வினா எண்கள் அமையும்.
2. பாடநூல்களிலிருந்து மட்டும் வினாக்கள் அமைதல் வேண்டும்.

**உள் மதிப்பீடு மற்றும் பருவத்தேர்விற்கான மதிப்பீட்டு முறை**

உள்மதிப்பீடு மற்றும் பருவத்தேர்விற்கான மதிப்பெண்கள் பின்வருமாறு.

**மதிப்பீட்டு முறை**

| **ஒவ்வொரு பாடத்திற்கும் எழுத்துத் தேர்வு** | **அதிகபட்ச மதிப்பெண்** | **குறைந்த பட்ச மதிப்பெண்** |
|---|---|---|
| உள்மதிப்பீட்டுத் தேர்வு மதிப்பெண் | 25 | 10 * |
| பருவத்தேர்வு மதிப்பெண் | 75 | 30 |
| மொத்தம் | 100 | 40 |

**தேர்ச்சிக்கான மதிப்பெண்**

ஒவ்வொரு தாளினும் தேர்ச்சி பெறுவதற்கு எழுத்துத் தேர்வில் 75 மதிப்பெண்களில் குறைந்தது 30 மதிப்பெண்களைப் பெறுதல் வேண்டும். 25 அகமதிப்பெண்களில் குறைந்தது 10 மதிப்பெண்களைப் பெறுதல் வேண்டும். கால அளவு 3 மணி நேரமாகும்.

**அகமதிப்பீடும் வினாத்தாள் அமைப்பும்**

**அகமதிப்பீடு**

ஒவ்வொரு பாடத்திற்கும் அகமதிப்பீட்டிற்கு 25 மதிப்பெண்கள் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | மாதாந்திரத் தேர்வு / மாதிரித் தேர்வு | - | 10 மதிப்பெண்கள் |
| 2. | திட்டக் கட்டுரைகள் | - | 10 மதிப்பெண்கள் |
| 3. | வருகைப்பதிவு | - | 5 மதிப்பெண்கள் |
| | | | ---- |
| | மொத்தம் | | 25 மதிப்பெண்கள் |
| | | | ---- |

**தேர்ச்சிக்கான குறைந்தபட்ச மதிப்பெண்**

பல்கலைக்கழகப் பருவத் தேர்வில் மாணவர்கள் ஒவ்வொரு தாளிலும் தேர்ச்சி அடைய குறைந்தபட்சம் 40 மதிப்பெண்கள் எடுக்கவேண்டும்.

## முதற்பருவம்

## தாள் 1 : இக்கால இலக்கியங்களும் உரைநடையும்

**பாட நோக்கம்:**

தற்கால இலக்கியப் போக்குகளையும் இலக்கணங்களையும் மாணவர் அறியுமாறு செய்தல்.

**அலகு– 1 : மரபுக்கவிதைகள்**

| | | |
|---|---|---|
| அ) பாரதியார் | - | 'பாரத தேசம்' - 10 பாடல்கள் |
| | | 'பாரத தேசம் என்று பெயர் சொல்லுவார்' எனத் தொடங்கும் பாடல். |
| ஆ) பாரதிதாசன் | - | 'வரிப்புலியே தமிழ்காக்க எழுந்திரு!' |
| | | 'ஒண்டமிழ்த் தாய்ச் சிலம்படியின்' எனத் தொடங்கும் பாடல். |
| இ) கவிமணி | - | 'ஒத்துழைப்பு'– 10 பாடல்கள் (மலரும் மாலையும்) |
| | | 'இம்மை வாழ்வுக்கும்' எனத் தொடங்கும் பாடல். |
| ஈ) நாமக்கல் கவிஞர் | - | 'படிப்பினை'– 3 பாடல்கள் |
| | | 'காந்தியைப்போல் அதிகாலை விழிக்க வேண்டும்' |

**அலகு– 2 புதுக்கவிதைகள்**

| | | |
|---|---|---|
| அ) மீரா | - | 'ஊசிகள்','நான் அவன் நண்பன்' |
| ஆ) மு.மேத்தா | - | 'முகத்துக்கு முகம்' |
| | | 'உலகம் உயர்க' |
| இ) சிற்பி பாலசுப்ரமணியம் | - | 'புன்னகை பூக்கும் பூனைகள்' |
| | | 'மனிதம்' |
| ஈ) வாலி | - | அவதாரபுருஷன் - 'தாடகை' |

**அலகு– 3 : உரைநடை** "புதிர் எதிர்காலம்"

| | | |
|---|---|---|
| (உரைநடைத் தொகுப்பு) | - | அறிவுப் பதிப்பகம் ஜானி ஜான்கான் சாலை, |
| | | இராயப்பேட்டை, சென்னை – 600 014. |

**அலகு– 4 : இலக்கிய வரலாறு**

அ) புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்

ஆ) தமிழ் உரைநடையின் தோற்றமும் வளர்ச்சியும்

இ) தமிழ்ச் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்

ஈ) தமிழ்ப் புதினங்களின் தோற்றமும் வளர்ச்சியும்

உ) தமிழ் நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்.

**பாடநூல்:**

| | | |
|---|---|---|
| தமிழ் இலக்கிய வரலாறு | - | மது.ச. விமலானந்தம்<br>அபிராமி பதிப்பகம்<br>78, கொடிமரத் தெரு, இராயபுரம்<br>சென்னை – 600 013. |

**பார்வை நூல்கள்:**

| | | |
|---|---|---|
| 1. தமிழ் இலக்கிய வரலாறு | - | தெ.பொ.மீ. |
| 2. தமிழ் இலக்கிய வரலாறு | - | முனைவர் மு. வரதராசன்<br>சாகித்திய அகாதெமி<br>டெல்லி. |
| 3. புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு | - | நீல. பத்மநாபன்<br>சிற்பி |

**அலகு– 5 : மொழித்திறன்**

அ) எழுத்துப்பிழை நீக்கம்

ஆ) வல்லினம் மிகும் இடங்கள்

இ) வல்லினம் மிகா இடங்கள்

**பார்வை நூல்கள்:**

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.கி. பரந்தாமனார் | - | 'நல்லதமிழ் எழுத வேண்டுமா?'<br>பாரி நிலையம், 184-இ, பிரகாசம் சாலை<br>சென்னை – 108. |
| 2. | பூவண்ணன் | - | 'மொழித்திறன்'<br>வர்த்தமானன் பதிப்பகம்<br>141-இ, உஸ்மான் சாலை<br>தி.நகர், சென்னை – 17. |
| 3. | புலவர் அ.சா. குருசாமி | - | 'தமிழில் பிழைகள் தவிர்ப்போம்'<br>நர்மதா பதிப்பகம்<br>10 நானாதெரு, தி. நகர்.<br>சென்னை – 17. |

## இரண்டாம் பருவம்

## தாள் 2 : இடைக்கால இலக்கியங்களும் சிறுகதையும்

**பாட நோக்கம்:**

**அலகு– 1 : சமய இலக்கியங்கள்**

| | | |
|---|---|---|
| அ) திருவாசகம் | - | திருச்சதகம் - அறிவுறுத்தல் |
| | | 1-7, பாடல்கள் |
| | | 'நாடகத்தே உன் அடியார்போல் நடித்து' |
| ஆ) ஆண்டாள் | - | 'திருப்பாவை' |
| | | 1-5 பாடல்கள் |
| இ) சித்தர் பாடல்கள் | - | குதம்பைச் சித்தர் |
| | | 1-25 பாடல்கள் |
| ஈ) திருவருட்பா | - | இராமலிங்க அடிகள்,ஆறாம் திருமுறை |
| | | தனித்திரு அலங்கல் 5 பாடல்கள் |
| உ) குணங்குடி மஸ்தான் | - | எக்காலக் கண்ணி |
| சாகிபு பாடல்கள் | | 1-10 பாடல்கள் |
| ஊ) இரட்சண்ய யாத்ரிகம் | - | எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை |
| | | இரட்சண்ய சரிதப் படலம் |
| | | 376 – 385 (10 பாடல்கள்) |

**அலகு– 2 : சிற்றிலக்கியங்கள்**

| | | |
|---|---|---|
| அ) முத்தொள்ளாயிரம் | - | சேரன் - 3.6 பாடல்கள் |
| | | சோழன் - 25,30 பாடல்கள் |
| | | பாண்டியன் - 58, 61 பாடல்கள் |
| ஆ) நந்திக்கலம்பகம் | - | 35,36,37 பாடல்கள் |
| இ) மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்-<br>சப்பாணிப் பருவம் 37<br>வருகைப் பருவம் 59 | | தாலாட்டுப் பருவம் 23 |
| ஈ) தமிழ்விடுதூது | - | 19 முதல் 33 வரை கண்ணிகள் |
| உ) திருக்குற்றாலக்குறவஞ்சி | - | 'பந்தடி பயிலுதல்' |
| | | பந்தாடிய சிறப்பு |
| | | பந்தாடலின் சிறப்பு – 4 பாடல்கள் |

**அலகு– 3 : சிறுகதை**

சிறுகதைத் தொகுப்பு - ரிஷி பப்ளிகேஷன்ஸ்
9, நூறடி ரோடு, காந்திபுரம்
கோயம்புத்தூர் - 641 012.
செல்: 9842096333

**அலகு– 4 : இலக்கிய வரலாறு**

அ) பன்னிரு திருமுறைகள்

ஆ) நாலாயிர திவ்யப் பிரபந்தம்

இ) இலக்கண நூல்கள்

ஈ) உரையாசிரியர்கள்

உ) சிற்றிலக்கியங்கள்

**பாடநூல்:**

தமிழ் இலக்கிய வரலாறு - முனைவர் மது.ச. விமலானந்தம்
அபிராமி பதிப்பகம்
78, கொடிமரத் தெரு, இராயபுரம்
சென்னை – 600 013.

**பார்வை நூல்கள்:**

1. தமிழ் இலக்கிய வரலாறு - தெ.பொ.மீ.
2. தமிழ் இலக்கிய வரலாறு - முனைவர் மு. வரதராசன்
சாகித்திய அகாதெமி
டெல்லி
3. புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு - நீல. பத்மநாபன்
சிற்பி

**அலகு– 5 : மொழித்திறன்**

அ) தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டுவினை, நேர்க்கூற்று, அயற்கூற்று.

ஆ) மயங்கொலிச் சொற்கள்

இ) நேர்காணல்

ஈ) விண்ணப்பம், அலுவலகக் கடிதம் எழுதுதல்

**பார்வை நூல்கள்**


1. அ.கி. பரந்தாமனார் - 'நல்லதமிழ் எழுத வேண்டுமா?'
2. புலவர்கோ. இளைய பெருமாள் - 'தமிழில் பிழையின்றி எழுதுவது எப்படி?'

   வானதி பதிப்பகம்

   23-இ, தீனதயாளு தெரு

   தி.நகர், சென்னை – 17.
3. டாக்டர். பொற்கோ - 'தமிழில் நாமும் தவறில்லாமல் எழுதலாம்'
   பூம்பொழில் வெளியீடு
   6வது குறுக்குத்தெரு
   அடையாறு, சென்னை – 20.
4. வெ. இறையன்பு - I.A.S. வழிகாட்டி

## மூன்றாம் பருவம்

## தாள் 3 : காப்பியங்களும் புதினமும்

**பாட நோக்கம்**

காலந்தோறும் எழுந்த காப்பியங்களின் போக்கையும், புதினத்தின் இலக்கிய வடிவத்தையும் யாப்பு,அணி போன்ற இலக்கண வகைகளையும் மொழிபெயர்ப்புத் திறனையும் மாணவர்கள் உணருமாறு செய்தல்.

**அலகு– 1 : சமணம், பௌத்தம், சைவம்**

அ) சிலப்பதிகாரம் - அடைக்கலக்காதை (முதல் 90 அடிகள் மட்டும்)

ஆ) மணிமேகலை - உலக அறவி புக்க காதை

இ) பெரியபுராணம் - சிறுத்தொண்டர் புராணம்

**அலகு– 2 : வைணவம், இசுலாம், கிறித்துவம்**

அ) கம்பராமாயணம் - மந்தரை சூழ்ச்சிப் படலம்

ஆ) சீறாப்புராணம் - மானுக்குப் பிணைநின்ற படலம்

இ) தேம்பாவணி - வளன் சனித்த படலம்

**அலகு– 3 : புதினம்** - கீதாரி – சு.தமிழ்ச்செல்வி

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.

41-B, சிட்கோ இன்டஸ்டிரியல் எஸ்டேட்

அம்பத்தூர், சென்னை – 600 098.

**அலகு– 4 : இலக்கிய வரலாறு**

அ) ஐம்பெருங்காப்பியங்கள்

ஆ) கம்பராமாயணம்

இ) பெரியபுராணம்

ஈ) சமணர்களின் தமிழ்த்தொண்டு

ஊ) பௌத்தர்கள் தமிழ்த்தொண்டு

**பாடநூல்:**

தமிழ் இலக்கிய வரலாறு - முனைவர் மது.ச. விமலானந்தம்

அபிராமி பதிப்பகம்

78, கொடிமரத் தெரு, இராயபுரம்

சென்னை – 600 013.

**பார்வை நூல்கள்:**

1. தமிழ் இலக்கிய வரலாறு - தெ.பொ.மீ.
2. தமிழ் இலக்கிய வரலாறு - முனைவர் மு. வரதராசன்
   சாகித்திய அகாதெமி
   டெல்லி
3. புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு - நீல. பத்மநாபன்
   சிற்பி

**அலகு– 5 : மொழித்திறன்**

அ) பா வகை (வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா - இலக்கணம்)

ஆ) அணியிலக்கணம் - (உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம்)

இ) மொழிபெயர்ப்பு – (அலுவலகக் கடிதங்கள், அரசாணைகள்)

**பார்வை நூல்**

கா. பட்டாபிராமன் - 'மொழிபெயர்ப்பியல்'– உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை.

**நான்காம் பருவம்**

**தாள் 4 : பண்டைய இலக்கியங்களும் நாடகமும்**

**பாட நோக்கம்:**

சங்க இலக்கியத்தின் பெற்றியையும் நாடகம் எனும் இலக்கிய வகையின் தன்மையையும் அகத்திணை, புறத்திணை இலக்கணங்களையும் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துதல்.

**அலகு– 1 : சங்க இலக்கியம்**

அ) நெடுநல்வாடை - முழுவதும்

ஆ) குறுந்தொகை - 8,16,25 (3 பாடல்கள்)

இ) அகநானூறு - 121,122,(2 பாடல்கள்)

ஈ) புறநானூறு - 47,50.73 (3 பாடல்கள்)

**அலகு– 2 : பதினெண்கீழ்க்கணக்கு**

அ) திருக்குறள் - ஒழுக்கமுடைமை

ஆ) நாலடியார் - நட்பாராய்தல் (1-5 பாடல்கள்)

இ) பழமொழி - ‘சான்றோர் செய்கை’ முதல் 5 பாடல்கள்

ஈ) திரிகடுகம் - 5 பாடல்கள் (91-95)

**அலகு– 3 : நாடகம்**

சேர தாண்டவம் - சாரா பப்ளிசர்ஸ்

- பாரதிதாசன் 78, வானப்பட்டரை தெரு

தெப்பக்குளம், திருச்சி – 620 002

செல்: 9842041112.

**அலகு– 4 : இலக்கிய வரலாறு**

அ) தமிழின் தொன்மையும் சிறப்பும்

ஆ) எட்டுத்தொகை

இ) பத்துப்பாட்டு

ஊ) பதினெண்கீழ்க்கணக்கு

**பாடநூல்:**

| | | |
|---|---|---|
| தமிழ் இலக்கிய வரலாறு | - | முனைவர் மது.ச. விமலானந்தம்<br>அபிராமி பதிப்பகம்<br>78, கொடிமரத் தெரு, இராயபுரம்<br>சென்னை – 600 013. |

**பார்வை நூல்கள்:**

| | | |
|---|---|---|
| 1. தமிழ் இலக்கிய வரலாறு | - | தெ.பொ.மீ. |
| 2. தமிழ் இலக்கிய வரலாறு | - | முனைவர் மு. வரதராசன்<br>சாகித்திய அகாதெமி<br>டெல்லி |
| 3. புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு | - | நீல. பத்மநாபன்<br>சிற்பி |

**அலகு– 5 : இலக்கணம்**

| | | |
|---|---|---|
| அ) அகத்திணை | - | குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலைத் திணைகள் மட்டும். |
| ஆ) புறத்திணை | - | வெட்சி, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை,வாகை, பாடாண், விளக்கங்கள் |

## Foundation Tamil Model Question Paper

முதற்பருவம்

தாள் 1 : இக்கால இலக்கியங்களும் உரைநடையும்

காலம்: 3 மணி மதிப்பெண்: 75

பகுதி அ

10×**2=20**

**பின்வரும் வினாக்களுக்கு ஒரு சொல் (அ) ஓரிரு தொடர்களில் விடையளிக்க.**

1. 'சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்' - இடம் சுட்டுக.
2. "சொன்ன சொல்லை காந்தியைப் போல காக்க வேண்டும்" - இடம் சுட்டுக.
3. "கக்கிருட்டு புடவையை
   காடு கட்டிக் கொண்டது" - இடம் சுட்டுக.
4. "புத்தாண்டு என்கிற
   பூரிக்கும் செய்தியின்மேல்
   சித்திரை வைத்த
   முத்திரை தெரிகிறது - இடம் சுட்டுக.
5. வள்ளுவர் வகுத்த இல்லறம் எது?
6. சமூகம் என்ற சொல்லுக்கு விளக்கம் தருக.
7. புதுக்கவிதை என்றால் என்ன?
8. தமிழ் நாடகத்தின் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
9. வல்லினம் மிகும், மிகா இடங்களைக் குறிப்பிடுக.
   அ) சல+சல ஆ) வருக+வருக

10.எழுத்துப்பிழை நீக்குக.

அ)நான் நள்ள நன்பண்
ஆ) புளி பசித்தாலும் புல்லைத் திண்ணாது.

பகுதி ஆ5×**5=25**

**பின்வரும் வினாக்களுக்கு ஒன்றரை பக்க அளவில் விடை தருக.**

11. அ) தமிழ்மொழியைக் காக்க பாரதிதாசன் இளைஞர்களுக்குக் கூறும் அறிவுரை யாது?
    (அல்லது)
    ஆ) படிப்பினை எனும் கவிதையில் காந்தியிடமிருந்து நாம் பின்பற்ற வேண்டியவை யாவை?
12. அ) நான் அவன் நண்பன் என்ற கவிதையில் கவிஞர் மீரா கூறும் செய்தி யாது?
    (அல்லது)
    ஆ) உலகம் உயர்க எனும் கவிதையில் மு. மேத்தா கூறும் அறிவுரை என்ன?
13. அ) வள்ளுவர் வகுத்த இல்லறம் பற்றி எழுதுக.
    (அல்லது)
    ஆ) தமிழர் பண்பாடு பற்றி எழுதுக.
14. அ) புதுக்கவிதையின் தோற்றம் குறித்து எழுதுக.
    (அல்லது)
    ஆ) தமிழ்ச் சிறுகதையின் முன்னோடிகள் இருவரைப் பற்றி எழுதுக.
15. அ) வல்லினம் மிகா இடங்களை சான்றுடன் எழுதுக.
    (அல்லது)
    ஆ) எழுத்துப்பிழை நீக்கத்திற்கான வழிகளை எழுதுக.

பகுதி - இ

3×**10=30**

**எவையேனும் மூன்றனுக்கு விரிவாக விடைதருக.**

16. தேசிய ஒருமைப்பாடு பற்றி பாரதி கூறும் கருத்துக்களை தொகுத்து எழுதுக.
17. விஞ்ஞானத்தின் வளர்ச்சியினால் ஏற்படும் இன்னல்களை 'மனிதம்' கவிதை மூலம் எழுதுக.
18. சங்க நெறிகள் பற்றி வ.சுப.மாணிக்கம் கூறும் கருத்துக்களை எழுதுக.
19. தமிழ் நாடகத்தின் தோற்றம் வளர்ச்சி பற்றி எழுதுக.
20. வல்லினம் மிகும் இடங்களைச் சான்றுகளுடன் விளக்குக.

## Foundation Tamil Model Question Paper

இரண்டாம் பருவம்

தாள் 2 : இடைக்கால இலக்கியங்களும் சிறுகதையும்

காலம்: 3 மணி மதிப்பெண்: 75

### பகுதி அ

**10×2=20**

**பின்வரும் வினாக்களுக்கு ஒரு சொல் (அ) ஓரிரு தொடர்களில் விடையளிக்க.**

1. 'நாடகத்தே உன் அடியார் போல் நடித்து நான் நடுவே' - இடம் சுட்டுக.
2. "மாங்காய்ப்பால் உண்டு மலைமேல் இருப்போர்க்குத் தேங்காய்ப்பால் எதுக்கடி" - இடம் சுட்டுக.
3. "நினையும் படிப்பில்லா நினைப் படிப்பார் உனையும் படிப்பிப்பாருண்டோ" - இடம் சுட்டுக.
4. "பைங்கொடி நங்கை வசந்த சவுந்தரி பந்து பயின்றனளே.- இடம் சுட்டுக.
5. கவர்னர் வண்டி சிறுகதையின் கதைக்கரு என்ன?
6. நந்தவனத்தில் ஓர் ஆண்டி சிறுகதையில் வரும் கதாபாத்திரங்களின் பெயர்களை எழுதுக.
7. சைவ சமயக் குரவர்கள் யார்?
8. முதல் மூன்று ஆழ்வார்கள் யார்?
9. செல்வி பாடம் கற்றாள் - பிறவினையாக மாற்றுக.
10. மக்கள் மழை நீரைச் சேமித்தனர் - செயப்பாட்டு வினையாக மாற்றுக.

### பகுதி ஆ5×**5=25**

**பின்வரும் வினாக்களுக்கு ஒன்றரை பக்க அளவில் விடை தருக.**

11. அ) மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளில் ஆண்டாள் இறைவனிடம் என்ன வேண்டுகிறாள்?

(அல்லது)

ஆ) குதம்பைச் சித்தர் கூறும் தத்துவக் கருத்துக்களை எழுதுக.

12. அ) சோழனின் சிறப்பை முத்தொள்ளாயிரம் வழிநின்று விளக்குக.

(அல்லது)

ஆ) வசந்த வல்லி பந்தடித்த அழகை வருணிக்க.

13. அ) காலனும் கிழவியும் சிறுகதையில் கிழவி காலனிடம் கூறிய கருத்துக்களை ஆய்க.

(அல்லது)

ஆ) 'விடியுமா?' சிறுகதையில் ஆசிரியர் கூறும் கருத்துக்களை ஆய்வு செய்க.

14. அ) இலக்கண நூல்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ) பள்ளு குறவஞ்சி சிற்றிலக்கியங்களின் சிறப்புக்களை எழுதுக.

15. அ) மயங்கொலிச் சொற்களுக்கு பொருள் வேறுபாடு தருக.

பணை– பனை இரை - இறை
மாரன் - மாறன் வலம் - வளம்

(அல்லது)

ஆ) செய்வினை, செய்பாட்டுவினையை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

### பகுதி - இ

**3×10=30**

**எவையேனும் மூன்றனுக்கு விரிவாக விடைதருக.**

16. மாணிக்கவாசகர் இறைவனிடம் வேண்டுவது யாது?
17. தமிழ்விடு தூதின் சிறப்புக்களை எழுதுக.
18. "பெரிய நாயகி உலா" சிறுகதையைத் திறனாய்வு செய்க.
19. ஆழ்வார்களின் தமிழ்த்தொண்டு குறித்து ஒரு கட்டுரை வரைக.
20. உள்ளூர்த் தொழிற்சாலை ஒன்றில் எழுத்தர் வேலை வேண்டி ஒரு விண்ணப்பக் கடிதம் எழுதுக.

## Foundation Tamil Model Question Paper

மூன்றாம் பருவம்

தாள் 3 : காப்பியங்களும் புதினமும்

காலம்: 3 மணி மதிப்பெண்: 75

## பகுதி அ

**10×2=20**

**பின்வரும் வினாக்களுக்கு ஒரு சொல் (அ) ஓரிரு தொடர்களில் விடையளிக்க.**

1. ‘ஒல்காச் செல்வத் துறுபொருள் கொடுத்து
   நல்வழிப் படுத்த செல்லாச் செல்வ’ - இடம் சுட்டுக.
2. “தீவினை உருத்தலின் செருக்கோடு சென்றேன் காலால்
   அந்தக் கருங்கனி சிதைத்தேன்” - இடம் சுட்டுக.
3. “தீண்டலும் உணர்ந்த அத்தெய்வக் கற்பினாள்
   நீண்டகண் அனந்தரும் நீங்க கிற்றிலள்” - இடம் சுட்டுக.
4. “பிணையென விடுத்தல் வேண்டும்”- இடம் சுட்டுக.
5. ஆடுமேய்க்கும் ஆட்டுக்காரர்கள் எந்த ஊரைச் சேர்ந்தவர்கள்?
6. பிச்சைக்காரியின் பிரசவத்திற்கு இருளாயி கூப்பிட்ட சாமியின் பெயர் என்ன?
7. சேக்கிழாரின் இயற்பெயர் என்ன?
8. சமணர்கள் இயற்றிய நூல்கள் இரண்டினை எழுதுக.
9. வெண்பாவின் இலக்கணத்ததை எழுதுக.
10. அணி என்றால் என்ன?

## பகுதி ஆ5×5=25

**பின்வரும் வினாக்களுக்கு ஒன்றரை பக்க அளவில் விடை தருக.**

11. அ) மாடலமறையோன் கோவலனை புகழ்ந்துரைத்த விதத்தை எழுதுக.

(அல்லது)

ஆ) சிறுத்தொண்டரின் சைவப்பற்றினை விளக்குக.

12. அ) நபிகள் நாயகத்திடம் மான் கூறிய செய்தியை விளக்குக.

(அல்லது)

ஆ) பஞ்சணையில் துயில் கொண்ட கைகேயியிடம் மந்தரை கூறியது யாது?

13. அ) ஆட்டுக்காரர்களின் தினசரி வாழ்க்கை பற்றி சு. தமிழ்ச் செல்வியின் உற்றுநோக்கலைத் தருக.

(அல்லது)

ஆ) ‘மன்னாரம்’– குறிப்பெழுதுக.

14. அ) இரட்டைக் காப்பியங்கள் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

ஆ) பௌத்தர்களின் தமிழ்த்தொண்டு குறித்து எழுதுக.

15. அ) கலிப்பா, வஞ்சிப்பா இலக்கணங்களை எடுத்துக்காட்டுடன் தருக.

(அல்லது)

ஆ) உவமை, உருவகம் குறித்து எழுதுக.

## பகுதி - இ

**3×10=30**

**எவையேனும் மூன்றனுக்கு விரிவாக விடைதருக.**

16. காயசண்டிகை சாபம் பெற்ற வரலாற்றினை விளக்குக.
17. வளன் சனித்த படலத்தை விவரி?
18. “கீதாரிகள்”என்னும் புதினம் வாயிலாக ஆசிரியர் சு.தமிழ்ச்செல்வி மனிதாபிமானத்தை சமுதாயத்தினரிடம் எவ்வகையில் வலியுறுத்துகிறார்?
19. கம்பராமாயணத்தின் சிறப்பு குறித்து ஒரு கட்டுரை வரைக.
20. தமிழில் மொழி பெயர்க்க.

From

R. Devaraj
11/202, R.V. Street
Melur
Madurai Dt.

To

The Editor
The Hindu,
Madurai- 625 020

Sir,

## Foundation Tamil Model Question Paper

நான்காம் பருவம்

தாள் 4 : பண்டைய இலக்கியங்களும் நாடகமும்

காலம்: 3 மணி மதிப்பெண்: 75

பகுதி அ

10×**2=20**

பின்வரும் வினாக்களுக்கு ஒரு சொல் (அ) ஓரிரு தொடர்களில் விடையளிக்க.

1. 'ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்
   குருகும் உண்டு தான் மணந்த ஞான்றே'- இடம் சுட்டுக.
2. "மெல்ல வந்து என் நல் அடி பொருந்தி
   'ஈ' என இரக்குவர் ஆயின்" - இடம் சுட்டுக.
3. "ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" - இடம் சுட்டுக.
4. "உண் பொழுது நீராடி யுண்டலும். . . "-இடம் சுட்டுக.
5. சேரதாண்டவத்தின் ஆசிரியர் யார்?
6. சேரதாண்டவத்தில் இடம்பெறும் கதைமாந்தர்கள் இருவரைக் குறிப்பிடுக.
7. அகநானூற்றுப்பாடல்களை எத்தனை வகைகளாகப் பிரிப்பர் அவை யாவை?
8. எட்டுத் தொகை நூல்களில் அகமும் புறமும் கலந்த நூல் எது?
9. குறிஞ்சித்திணையின் முதல், உரிப் பொருள்களை எழுதுக.
10. பாடாண் திணையின் விளக்கத்தைத் தருக.

பகுதி ஆ5×**5=25**

**பின்வரும் வினாக்களுக்கு ஒன்றரை பக்க அளவில் விடை தருக.**

11. அ) நெடுநல்வாடையில் கூறப்படும் கூதிர்கால வருணனையை எழுதுக.

(அல்லது)

ஆ) ஆலங்குடி வங்கனார் பாடலை குறந்தொகை வழி விளக்குக.

12. அ) சான்றோர் செய்கையாக முன்றுரையரையனார் யாது கூறுகிறார்.

(அல்லது)

ஆ) திரிகடுகத்தில் கூறப்பட்டுள்ள செய்திகளை எழுதுக.

13. அ) இரும்பிடர்த் தலையாரின் திறனை மதிப்பிடுக.

(அல்லது)

ஆ) சேர தாண்டவம் நாடகத்தில் நெய்தலி என்னும் மருதி பெறும் இடத்தை விளக்கிக் கூறுக.

14. அ) தமிழின் தொன்மையும் சிறப்பும் விளக்குக.

(அல்லது)

ஆ) புறநூல்கள் பற்றி எழுதுக.

15. அ) முல்லைத்திணைக்குரிய முதல், கரு, உரிப்பொருள்களை எழுதுக.

(அல்லது)

ஆ) வெட்சி, கரந்தை திணைகளை விளக்குக.

பகுதி - இ3×**10=30**

**எவையேனும் மூன்றனுக்கு விரிவாக விடைதருக.**

16. தலைமகன் நெஞ்சிற்குச் சொல்லிய பாலைத்திணைப் பாடலை விவரி.
17. ‘நட்பாராய்தல்’ குறித்து நாலடியார் கூறும் செய்திகளை எழுதுக.
18. ஆட்டனத்தியின் பண்புகளை சேரதாண்டவம் வாயிலாக விளக்குக.
19. பத்துப்பாட்டில் ஆற்றுப்படை நூல்கள் குறித்து ஒரு கட்டுரை வரைக.
20. மருதத்திணையின் முதல், கரு, உரிப் பொருள்களை எழுதுக.